# நாய்ப் பொழப்பு

பொழப்புத் தேடி வர்றவங்களுக்கெல்லாம் அடைக்கலம் கொடுத்து அவங்கள வசதியாக்கி வுடுறதுதான் செட்டிக் குளம் சனங்களுக்கு வழக்கம். அதே போல, வந்தவங்க எவ்வளவு வசதியாயிட்டாலும்கூட அவங்களப் பாத்து வவுறு எரியிற பழக்கமும் அந்தச் சனங்களுக்கு இல்ல. பெருமாள் கோனாருக்குங்கூட செட்டிக்குளம் சொந்த ஊரு இல்ல, வடக் கருந்து பஞ்சம் பொழைக்க வந்தவருதான். அவரு சாதிக்காரனெல்லாம் அங்க ஆடுமாடு மேய்ச்சுகிட்டு கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கறப்போ இவரு மட்டும் வெவரமாக் கௌம்பி வந்து இங்க மாட்டுல பாலக் கறந்து, கைப்புள்ளைக்காரிகளுக்கும் டீக்கடைக்கும் ஊத்திக் காசு பாத்துகிட்டுருந்தாரு. காசுபணம் நெறைய சேந்ததும் மொத தாரத் துக்குப் புள்ளை இல்லேங்கவும் கடசீக் காலத்துல தனக்குக் கஞ்சி ஊத்தவும் வம்சம் தளைச்சுத் தன் பேரச் சொல்ல வாரிசு வேணும்ன் னும் மொத சம்சாரத்தோட தங்கச்சியவே ரெண்டாந் தாரமாக் கட்டிகிட்டு வந்துட்டாரு. அது பேரு சுசிலா. சுசிலாக்கா ஒல்லியா

ஒட்டடக் குச்சி மாதிரி இருந்தாலும், நல்ல சிகப்பாருக்கும். வத்த லான மொகத்துலயும் சிரிக்கறப்போ சின்னதா கன்னத்துல குழி விழும். பச்சரிசி மாதிரிருக்கற பல்லு பாக்க ரொம்ப அழகா ருக்கும். சிகப்பு, பச்ச, மஞ்சள்ன்னு அடிக்கிற மாதிரி எந்த கலர்ல அது சீல கட்டுனாலும் எடுப்பாருக்கும். அழகுல மட்டுமில்லாம, குணத்து லயும் தங்கம்ன்னுகூட சொல்லக் கூடாது, அதுக்கும் மேல. ஏன்னா தங்கத்தக்கூட நல்ல தங்கமான்னு உரசிப் பாத்துதான் ஆசாரி வாங்குறான். தெனம் மீந்துடுற பாலக் கண்ணும் கருத்துமாக் காய்ச்சி ஒறை ஊத்திவச்சு, மறுநாக் காலைல அத எடுத்து மத்தப் போட்டுக் கடஞ்சு வெண்ணெ எடுத்துகிட்டு மோர வித்துப்புடும். வாரக் கடசீல மொத்த வெண்ணெயவும் முருங்கத் தழை போட்டுக் காச்ச றப்போ அந்தத் தெருவே நெய் வாசம் வீசும். அப்டி ஒரு கைப் பக்குவம் அதுக்கு. காலைல பள்ளிக்கூடம் போற புள்ளைங்க கம்மங் கஞ்சியக் குடிக்க மொகஞ் சுளிக்கறப்போ அதுங்க கைல பத்துக் காசவும் பித்தளச் சொம்பவும் குடுத்துத் துரத்துனம்ன்னா அதுங்க நேரா ஓடிப்போயி கோனாரு வூட்டுலதான் நிக்கும். சுசிலாக் காவும் காச வாங்கி முந்தானியில முடிஞ்சுகிட்டு சொம்பு நெறைய மோர ஊத்திக் குடுக்கும். மோரத் தொட்டு சுவத்துக்கு வெள்ளை யடிக்கலாம், அவ்வளவு திக்காருக்கும். சில புள்ளைங்க போற வழியிலயே பொடலங்காச் செட்டிக் கடைல காசக் குடுத்துப் புளிப்பு முட்டாய வாங்கி வாயில போட்டுகிட்டு, போயி வெறும் சொம்போட நிக்கும். அதுங்களுக்கும் சுசிலாக்கா கொஞ்சமும் மொகஞ்சுளிக்காம மோர ஊத்திக் குடுத்தனுப்பும். புள்ளைங் கன்னா சுசிலாக்காவுக்குக் கொள்ளைப் பிரியம். ஆனா, அதுக்கு தான் ரொம்ப நாளு புள்ளையே பொறக்காம இருந்துச்சு.

ஊருக்குள்ள மாட்டப் பெருக்கணுங்கறதுக்காகக் கோனாரு வெளி யூர் போயி கறவ மாட்டப் புடிச்சுகிட்டு வந்து ஊருல அதெக் கடனுக்குக் குடுத்து, பாலக் கறந்து கடன எடுத்துக்கறது வழக்கம். அப்டி ஒரு தடவ நெய்குப்பைக்கு மாடு வாங்கப் போன எடத்துல வைக்கப் போருக்கடில போட்டுருந்த ஏழெட்டு நாய்க்குட்டில சலவனாப் பாத்து ஒண்ண, தாயில்லாத நேரத்துல எடுத்து சாக்குப்

பைல போட்டுக் கட்டி சைக்கிள்ல முன்னால மாட்டிகிட்டு வந்து சேந்தாரு. வீட்ல கொண்டாந்து சாக்குப் பைய அவுத்துவுட்டதும் சுசிலாக்கா அதப் பாத்து ரொம்ப சந்தோஷப்பட்டுச்சு. நாய்க்குட்டி இன்னும் கண்ணுகூட முழிக்காமருந்துச்சு. நின்னுகிட்டேருக்கும், ச்ச்ன்னு யாராவது சத்தம் குடுத்தாக் காத வெடச்சுகிட்டு சத்தம் வந்த பக்கமாத் தலையத் திருப்பும், அப்படியே ஓடும். சில சமயம் நேரா ஆளுங்க கிட்டயே வந்துடும். சில நேரம் தவறிப்போயி செவுத்துல மோதிகிட்டு வீல்வீல்னு கத்த ஆரம்பிச்சுடும். நாலஞ்சு நாள்லயே கண்ணு முழிச்சிடுச்சு. மரக் கலர்லருந்துச்சு அது. நடுமண்டையில வெள்ளையா வெங்கடேசப் பெருமாள் நாமம் மாதிரி நீட்டக் கோடு இருந்துச்சு. கோனாரு சுசிலாக்காக்கிட்ட "சுசிலா, அது காலுல எல்லாத்துலயும் அஞ்சு வெரலு இருக்குதுடி, அப்டி இருக்கறது அபூர்வம். இது மாதிரி இருபது வெரலுருக்கற நாய் ரொம்ப அறிவாருக்குமாம்"ன்னு சொல்லி அதோட ஒரு காதப் புடிச்சுத் தூக்க, அது வீல்ன்னு கத்தவும்.... "அதக் கீழ வுடுங்க... பச்ச ஒடம்பு"ன்னு சொல்லிச் சத்தம் போட, கீழ அத வுட்டுட்டுட்டாரு. அதுக்கப்பறமா சுசிலாக்கா தெருவுல எங்க நாயப் பாத்தாலும் அதோட வெரல எண்ண ஆரம்பிச்சிருச்சு. எல்லா நாய்க்குமே பின்னங்கால்ல நாலு வெரலுக்கு மேல இல்லாமலிருக்கறதப் பாத்ததும் உண்மையிலேயே இது அதிஷ்டமானதுதான்னு, அதுக்குப் பாலயும் மோரயும் ஊத்தி வளக்க, அது கொழுகொழுன்னு வளந்துடுச்சு.

செட்டிக்குளம் வந்தப்பறம் ஊர் முழுக்கக் கோனாருக்குப் பழக்கம் ஆயிட்டாலும், கந்துவட்டிக்குக் குடுக்கற ராமசாமிக் கவுண்டர் கிட்டதான் நெருக்கம் அதிகமா இருந்துச்சு. மாட்டுக்காரனுக்குப் பணம் கொடுக்கப் பத்தாமப் போகும்போது நம்மள நம்பிக் கை மாத்துக் குடுக்கறாரேன்னு இவரும், மொதலு திரும்ப வராட்டாலும்கூட வாரம் முடிஞ்சா வட்டியக் கணக்கா எண்ணி வச்சிடுறாரேன்னு அவரும் பழகப்பழக நெருக்கம் கூடிப்போச்சு. இவங்களப் போலவே ரெண்டு பேர் சம்சாரங்களும் நெருங்கிப் பழகினாங்க. கவுண்டர் சம்சாரம் பாக்யத்தம்மா கோனாரு வூட்டுக்குப் போம்போ

தெல்லாம் சுசிலாக்காகிட்ட ''நாம சிறுவாச்சூர் போயி பாம்பு புத்துல பால் ஊத்தி முட்ட வச்சிட்டு வந்தம்னா உனக்கு ஒடனே உண்டா யிரும்டி.... வா போவம்"னு சொன்னதோட இல்லாம, கோயிலு கோயிலாக் கூட்டிகிட்டுத் திரிஞ்சதும்கூட அவங்க நெருக்கத்துக்குக் காரணமா இருக்கலாம். பாக்யத்தம்மா பொண்ணு நாலும் ஆணு ரெண்டுமா ஆறு புள்ளைய பெத்ததுன்னு சுசிலாக்காவுக்குத் தெரிஞ் சதாலதான் அது பேச்சக் கேட்டு இதும் அலைஞ்சது. எப்படியோ கால நேரம் கூடிவந்து சுசிலாக்காவும் தாயாயிட்டதால பாக்யத்தம் மாவுக்கு அங்க செல்வாக்கு அதிகமாவே இருந்துச்சு. கவுண்டர் வெவசாயத்த வுட்டதுலருந்து அந்தம்மாதான் எல்லாத்தயும் கவனிச் சுக்கிடுச்சு. அதுக்கு ஏர் கூலி கொடுக்க, களையெடுத்த கூலி குடுக் கன்னு பணம் தேவப்படுறப்போ சுசிலாக்காகிட்டதான் கைமாத்து வாங்கும். நாய்க்குட்டி வந்த மறு வருசமே சுசிலாக்காவுக்குப் புள்ளை பொறந்துடவும் இன்னும் அதுமேல பாசம் அதிகமாவ ஆரம்பிச்சுது.

வழக்கமா மோர் வாங்கப் போனப்ப சின்னவன் நாயப் பாத்துட்டு வந்து பாக்யத்தம்மாகிட்ட "கோனார் வூட்ல நாய்க் குட்டியிருக்குது. நமக்கும் ஒண்ண அப்பாவத் தூக்கிட்டு வரச் சொல்லு"ன்னு சொன்னதக் கேட்டுட்டுப் போன பாக்யத்தம்மா நாயப் பாத்ததும் ''ஏன் சுசிலா, அழகாருக்குதே, எங்கருந்து தூக்யாந்தீங்க"ன்னு கேட்டு அதத் தூக்கி ஞ்சிக்கு நேரா வச்சுக் கொஞ்சறப்போ நாய்க்குட்டி நாக்க நீட்டி அந்தம்மா க்க நக்கவும், "என்னாடி இது இந்த அட்டூழியம் பண்ணுது"ன்னு கேக்க, "ஏம்மா, நாய் நன்றியக் காட்டறதுக்கு வால ஆட்றதும் நாக்கால நக்கறதும் விட்டா அதுக்கு வேறென்ன தெரியும்''னு சுசிலாக்கா சொல்ல, ''அதுவும் சரிதான்''னு பாக்கியத்தம்மா சொல்லிட்டு, " கொஞ்சம் எங்க வூட்டுவரைக்கும் தூக்கிட்டுப் போறேன், திரும்பக் கொண்டாந்து வுட்டுர்றேன்''னு நாய்க்குட்டிய எடுத்து மடியில கட்டிகிட்டு வந்துடுச்சு. இப்டி ஒரு நாலு மாசத்துக்கு இங்கருந்து அங்க தூக்கிட்டுப் போறதும், அங் கருந்து இங்க தூக்கிட்டு வாரதுமாவே இருந்தாங்க. அதுக்கப்பறமா

நாய் அதாவே வர ஆரம்பிச்சுருச்சு. ஒரு தடவ பொங்கலண்ணைக்கு ரெண்டு வீட்லயும் சக்கரைப் பொங்கலப் போட, ஆவல்ல அதும் திண்ணுடுச்சு. வயிறு உப்பிப் போயி நடக்க முடியாம கால மெதுவா தூக்கித்தூக்கி வச்சு அது அன்ன நட நடக்கறதப் பாத்துட்டு கவுண்டர் தான் "என்னடா நாய்க்கர் நட நடக்குற. வேகமா வா" ன்னு சொல்ல, எல்லாரும் சிரிச்சாங்க. ஏன்னாக்க, டீக்கட வெச்சுருக்கற திருமலை நாயக்கரு ரெண்டு கால்லயும் ஆணி வந்து நடக்க முடியாம ஒவ்வொரு அடிய எடுத்து வெக்கறப்பவும் கீழ பாதயப் பாத்துப்பாத்து நடப்பாரு. அதிலருந்தே எல்லாரும் நாய்குட்டிய நாய்க்கரேன்னு கூப்ட்டுக் கூப்ட்டு இப்பல்லாம் எங்கருந்து நாய்க்கரேன்னு கூப்ட்டாலும் ஒடனே கிட்டக்க ஓடியாந்துடும். கோனாரு கறவைக்குப் போறப்பவும் சரி, கவுண்டர் கந்துவட்டி வசூலுக்குப் போறப்பவும் சரி, சைக்கிள் பின்னாலயே ஓடும். ஊர் எல்லைல இருக்கற பெட்டிக் கடையில ரெண்டு வர்க்கிய வாங்கிப் போட்டுட்டு, திரும்பிப்போடான்னு சொன்னா அதத் தின்னுட்டு வூட்டுக்கு வந்து சேந்துடும்.

சின்னக் குட்டியாயிருக்கறப்போ நாய்க்கருக்கு சுசிலாக்கா கொட்டாங்கச்சியிலதான் பால ஊத்துச்சு. அதும் குடிச்சுச்சு. பாக்யத்தம்மா வூட்ல பால் ஊத்ற வழக்கமில்ல. டீ குடிக்கற பழக்கமிருந்ததால அந்தம்மா தனக்கு வாங்கியார டீத்தண்ணிய சொம்ப ரெண்டு சுத்து சுத்தி ஆத்திட்டு, வாசப்படி காண் கல்லு குழியிலருக்கற புழுதிய வாயால ஊதிட்டு ஊத்தும். நாய்க்கரும் ரெண்டு நாள் மோந்துப் பாத்துட்டுக் குடிக்காம இருந்துச்சு. ணாம் நாளு நக்கிப்பாத்துச்சு. இனிப்பா இருக்கவும் என்ன நெனச்சுதோ தெரியல, குடிக்க ஆரம்பிச்சுருச்சு. நமக்கு இங்க இதுதான் போலருக்குன்னு நெனச்சிருக்கும். நாய்க்கர் நல்ல வாட்டசாட்டமா வளர நாலு வருசமாச்சு. அப்பதான் அரசாங்கப் பள்ளிக்கூடத்துல நாய்க் கண்காட்சி நடத்துனாங்க. ஊருல இருக்கற சொங்கி நாய், சொறி நாயவெல்லாம்கூடத் தேடிப் புடிச்சுக் குளிப்பாட்டி கயித்துல கட்டி இழுத்துகிட்டு வந்து சேந்தாங்க. நாலு வருசத்துக்கு முன்ன ஒருக்க தவுடன்ங்கறவரு

''எலும்பிச்சங் கன்னு வச்சேன், சரியாக் காய்க்க மாட்டேங்குது மாமா"ன்னு தோலுவெட்டி ரெங்குகிட்ட யோசன கேக்கும்போது அவரும் "நாயடிச்சுப் பொதைடா, நல்லாக் காய்க்கும்"னு சொல்ல, இவரும் தெருவுல கெடந்த நாய அடிக்க ஆரம்பிக்க, எலும்பிச்சங் கன்னு வச்சவன்லாம் வண்டி மொளைக்குச்சிய வச்சிகிட்டு, நாய்ங் களத் தொரத்தப்போக, எப்படித்தான் அதுகளுக்கு இந்த வெசயம் தெரிஞ்சதோ தெரியல, ஒரு நாய்கூட ஊருக்குள்ள ஆம்புடுல, எல்லாம் ஓடி ஒளிஞ்சுடுச்சுங்க. அதுக்கப்பறம் இப்பதான் திரும்ப இந்த விசேசம் நடக்குது. சுத்துப்பத்துல இருக்கற ஊருலருந் தெல்லாம் நாய்ங்க வந்து சேந்ததுங்க. சிலது பக்கத்துலருக்கறதப் பாத்து வால ஆட்டி ஒறவுமொற விசாரிச்சுகிச்சு. சிலது க்கோட மேலுதட்டயும் சேத்துத் தூக்கிகிட்டு பல்ல இறுக்கிக் கடிச்சுகிட்டு, கர்புர்ன்னு சத்தம் குடுத்துப் பழைய பகயக் காட்டிகிச்சுங்க. இன்னும் சிலது என்னமோ நடக்கப்போகுதுன்னு நெனச்சுகிட்டு கண்ண உருட்டிஉருட்டி சுத்தும்முத்தும் பாத்து மெரண்டு கயித்த இழுத்துகிட்டு ஓடத் தயாரா நின்னுச்சுங்க. ணு வாத்யாருங்க நோட்டக் கைல வச்சுகிட்டு நாய்ப் பேர எழுதிகிட்டு மார்க் போட்டு கிட்டு வந்தாங்க. நாய்க்கர்கிட்ட வந்ததும் பேரக் கேட்டதும் கவுண்டர், நாய்க்கர்ன்னு சொல்ல, "சாதிப் பேரப் போயி வச்சிருக் கீங்களே, நெசம்மாவே இது என்ன சாதின்னு தெரியுமா?"ன்னு வாத்யார் கேக்க, ''சாதில்லாம் மனுசனுக்குத்தான் வாத்யாரே, நாயில எங்க சாதியிருக்குது? எல்லாம் ஒரே சாதிதானே. இவ்வளவு படிச்சிருக்கீங்க, இதுகூடத் தெரியாம எங்கிட்ட கேட்டுகிட்டு"ன்னு ஒரே போடாப் போட, அவரு வாயப் பொத்திகிட்டு நகந்துட்டாரு. மதியத்துக்கு மேல ஓட்டப் பந்தயம் வச்சாங்க. சுண்ணாம்புல கோடு போட்டு "இந்தப் பக்கம் வரிசையா நாயப் புடிச்சுகிட்டு ஒருத்தர் நில்லுங்க. எதுத்தாப்பல பேர் சொல்லிக் கூப்ட ஒருத்தர் நில்லுங்க. விசில் ஊதுனதும் கயித்த வுடுங்க. எது மொதல்ல வருதோ அதுக்குப் ப்ரைஸ் குடுப்போம்''ன்னு வாத்யார்ங்க சொல்ல, எல்லாரும் அப்டியே செய்ய, நாய்க்கரப் புடிச்சுகிட்டுக் கோனாரு நிக்கவும், கவுண்டர் எதுத்தாப்ல போயி நின்னாரு. விசில ஊதுனாங்க. ரெண்டு,

ணு நாயிதான் நேரா ஓடிச்சு. மீதியெல்லாம் கூட்டத்துக்குள்ள பூந்து, வுட்டாப் போதும்னு வூட்டப் பாத்து ஓடிடுச்சு. நாய்க்கர்தான் மொதல்ல வந்துச்சு. சைக்கிள் கூட ஓடிப் பழக்கமிருந்ததாலக் கூட இருக்கலாம். பொழுதெறங்க மேட போட்டு எவர்சில்வர் வட்டியப் பரிசாக் குடுத்தாங்க. கோனாருதான் மேடயில ஏறி வாங்கிட்டு வந்தாரு. அதுலருந்து சுசிலாக்கா நாய்க்கருக்கு அந்த வட்டிலயே சோறு போட்டுருக்கும் போலருக்கு. கவுண்டர் வூட்ல காணு கல்லு மேல சோறு வச்சா திங்காம அடம் பண்ணுச்சு நாய்க்கர். மறுநா கவுண்டர் பாத்திரக்காரன்கிட்ட அது மாதிரியே வட்டிய வாங்கியாந்து வச்சு சோறு போடச் சொன்னாரு.

கார்த்திக மாசம் வந்துட்டாப் போதும், ஊர் நாய்ங்க எல்லாம் சேந்து கிட்டு பொட்ட நாய்ங்கள வெரட்ட ஆரம்பிச்சுரும். நாய்க் கரும் அதுக்கு விதிவிலக்கில்ல. துணய எப்ப தேடுச்சோ, எப்ப சேந்துகிச்சோ தெரியாது. காலம்பற தண்ணி புடிக்கப் போன எடத் துல சுசிலாக்கா கண்ணுல பட்டுருச்சு. “வூட்டுக்கு வா, கட்ட வெளக்க மாத்தாலயே நாலு சாத்து சாத்துறேன்”னு சொல்லிட்டுத் தண்ணியப் புடிச்சுகிட்டு வந்திருச்சு. நாய்ங்களும் தண்ணி எறைக்கிற கிணத் தடிகிட்டயோ, இல்ல தண்ணி புடிக்கிற அடிபம்பு பக்கமாவோத் தான் நிக்குங்க. அதுக்கும் காரணம் இருந்துச்சு. இதுகளப் பாத்ததும் எளம் பொண்ணுங்களாருந்தா வெக்கமா ஞ்சிய டிகிட்டுப் பேசாம போயிடும்ங்க. கல்யாணமான பொம்பளைங்களாருந்தா, “சனியனுங்களா, உங்களுக்கு வேற எடமே கெடைக்கலயா”ன்னு சொல்லி வெறுங்கையால வெரட்டறதோட சரி. ஆனா, சாவடிப் பக்கமோ, இல்ல, கட வீதியிலயோ ஆம்பளப் பசங்க இருக்கற எடத்துல நின்னுச்சுன்னா அவ்வளவுதான், செத்துச்சுங்க. வண்டி மொளக்குச்சியாருந்தாலும் சரி, அது வாங்கருவாளாயிருந்தாலும் சரி, எது கைல கெடைக்குதோ அத வச்சே சாத்துசாத்துன்னு சாத்து வானுங்க. அதுங்க உறுவிகிட்டு ஓட முடியாமயும், கெடைக்கிற சொகத்தை அனுபவிக்க முடியாமயும் கத்துற கத்து இருக்குதே, அது பாக்குற நம்ம ஈரக்குலைய அத்துடும். அதுக்கும்கூட ஒரு கத

சொல்வாங்க வேடிக்கயா. பஞ்சபாண்டவர் அஞ்சு பேரும் பாஞ்சாலியக் கட்டிகிட்டப்போ ரெண்டு பேரு ஒரே நேரத்துல பாஞ்சாலிகிட்ட போயிடக் கூடாதுன்னுட்டு அவங்களுக்குள்ள பேசி வச்சுகிட்டுடாங்களாம். யாரு உள்ள போனாலும் வாசல்ல செருப்ப விட்டுட்டுப் போகணும். வெளியில செருப்பு கெடந்தா மத்தவங்க உள்ள நொழையப்படாதுன்னு. அப்டியிருக்கும்போதுதான் தருமரு செருப்ப வெளிய வுட்டுட்டுப் போனப்ப அது புதுச் செருப்பா இருந்திருக்குது. மாட்டுக் கொழுப்பு வாசத்துக்கு அங்கருந்த நாயி அதத் தூக்கிகிட்டுப் போயி கடிச்சுக் கொதறிப் போட்டுடுச்சாம். அப்ப வீட்டுக்கு வந்த அர்ஜுனன், அண்ணன் பாஞ்சாலிகூட இருக்கறதப் பாத்துட்டாராம். இதனால கோவமான தருமரு அந்த நாயப் பாத்து. “நான் பொண்டாட்டியப் போடுறத என் தம்பி பாக்க நீ காரணமாயிட்ட. அதனால, நீ கூடுறத இந்த ஊரே பாக்கட்டும்”ன்னு சாபம் வுட்டுட்டாரம். வாயுள்ள சீவனா இருந்தா அதுக்கு விமோசனம் கேட்டு வாங்கிட்டு வந்திருக்கும். அதுதான் வாயில்லா சீவனாச்சே, அதான் பேசாம வந்திடுச்சு. இப்பவும்கூட பாத்தா நாய்ங்க படுத்தே இருக்கும். திடீர்னு எழுந்து வேகமா ஓடும். எங்கே ஓடுது, எதுக்கு ஓடுதுன்னு தெரியாது. திரும்ப அதே எடத்துல வந்து படுத்துக்கும். இதெப் பாக்குறவங்க அது தருமரத் தேடித்தான் ஓடுதும்பாங்க.

நாய்க்கர் பத்து வருசம் நல்ல ஆரோக்கியமாத்தான் இருந்துச்சு. அதுக்கப்பறமாத்தான் கரணகரணயா தெரண்டுருந்த கெண்டக்காலு சதையெல்லாம் தொளதொளன்னு ஆயிப்போச்சு. சடசடயா வளந்திருந்த முடியெல்லாம் கொட்டி, அங்கங்க திட்டுதிட்டாப் புண்ணு வந்திருச்சு. அது அசிங்கமாயிப்போனாலும்கூட ரெண்டு வீட்லயும் யாரும் அத ஒதுக்கிவைக்கல. ஆனா, சமையல்கட்டுவரைக்கும் பூந்து வர்ற நாய்க்கர் இப்பல்லாம் வெளி வாசலோடயே நின்னுகிச்சு. முன்ன மாதிரி இப்பல்லாம் சரியா சாப்டறதுகூட இல்ல. திடீர்ன்னு ஒரு நாளு நல்லா சாப்ட்டுருக்கு. அதப் பாத்ததும் சுசிலாக்காகூட மறுபடியும் நாய்க்கர் தேறிவந்துடுமோன்னு

சந்தோஷப்பட்டுருக்கு. ஆனா, அடுத்த நிமிசமே நாய்க்கர் ஓடிப் போயி வாசல்ல கக்கிட்டு வந்து படுக்கறதப் பாத்ததும், மனசு விட்டுப்போச்சு. பத்து நாளு அப்டியே இருந்து பதினோராம் நாளு கோனாரு வூட்லருந்து கவுண்டர் வூட்டுக்கு நடந்து வாரப்ப, ரோட் லயே மயங்கி விழ, மணல் லாரிக்காரன் மேல ஏத்தி செத்துப் போச்சு. தெருவுல குண்டு வெளையாண்டுகிட்டிருந்த புள்ளைங்க வந்து சொல்லவும், கவுண்டர்தான் ஓடிப் போயி கொடல் வெளிய வந்து சரிஞ்சு கெடக்குற நாய்க்கர அப்டியே தூக்கி சைக்கிள் பின்னால வச்சுக் கட்டிகிட்டு வந்தாரு.

அப்பறமா கோனாருகிட்ட சொல்லிட்டு நெழலாருக்கட்டுமேன்னு தோட்டத்துல கொண்டுபோயி கொய்யா மரத்துக்குக் கீழ குழி வெட்டிப் பொதச்சுட்டு வந்தாரு. புருசன் செத்தாலே பொணம் தூக்குனதும் ஓலைய வச்சு சோறாக்குற காலத்துல ஞு நாளு அடுப்பப் பத்தவைக்காம ரெண்டு வூட்லயும் அத்தன உருப்படியும் கொலப்பட்டினியாக் கெடந்துதுங்க....

கவுண்டர் வூட்டுக் கொய்யா மரம் எப்பவுமே சரியாவே காய்க்காது. ஒண்ணும் ரெண்டுமாதான் காய்க்கும். அதுக்கும்கூட பாக்யத்தம்மா, “எலந்த முள்ளக் கட்டி வுடுங்க. போற வார சனங்க பறிக்காமருக் கும்”ன்னு புருசன்கிட்ட சொல்லிகிட்டேருக்கும். “அடி போடி பொழப்பத்தவளே, வேற வேலயில்ல மனுசனுக்கு”ன்னு கவுண்டர் போயிடுவாரு. அந்தம்மாளும் காய்க்கற ஒண்ணு ரெண்டவும்கூடப் பறிச்சாந்து, அடுக்குப் பானைல போட்டுப் பழுக்கவச்சுத் தன் மக வூட்டுக்குக் குடுத்தனுப்பும். நாய்க்கரப் பொதச்ச வருசம் கொத்துக் கொத்தா காய்ச்சுத் தொங்குச்சு. அதப் பாத்ததும் கவுண்டர் என்ன நெனச்சாரோ தெரியாது, எலந்த முள்ள வெட்டியாந்து மரத்தச் சுத்திக் கட்டி வுட்டு, கயித்துக் கட்டிலக் கொண்டாந்து போட்டு கிட்டு ராவும்பகலுமாக் காவ காக்க ஆரம்பிச்சுட்டாரு. பாக்யத்தம்மா வும்கூட கவுண்டருக்குப் பொறுப்பு வந்திருச்சோன்னு நெனைச்சு சந்தோஷப்பட்டுச்சு.

ஆனா, கவுண்டர் தான் பெத்த புள்ளைங்களக்கூட ஒரு காயத் தொட வுடல, தானாக் கீழ உதிர்ற பழங்களயும்கூடப் பொறுக்கிக் பக்கத் துலருந்த கெணத்துல கொட்டிகிட்டேயிருந்தாரு. மரத்துல காய்ச்ச அத்தனக் காயவும் ஒருத்தரயும் திங்கவுடாம பண்றதப் பாத்துட்டு அவருக்குப் பயித்தியம் புடிச்சிடுச்சுன்னுகூட சொல்லிகிட்டாங்க. ஆனா, கவுண்டர் மட்டும் “என் நாய்க்கரத் திங்க எந்தப் பயலயும் நான் வுடமாட்டேன். தெரிஞ்சுக்கங்க”ன்னு தெளிவாப் பல வருசமா சொல்லிகிட்டேயிருந்தாரு.